09-02-2025 Tamil
09/02/25 English

காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா"
Madhuban Avyakt BapDada Om Shanti

ரிவைஸ் 18.01.2004
Revise 18-01-2004

உலகிற்கு அதிகாரியின் நேரடிக் குழந்தை - இந்த நினைவிலிருந்து சர்வசக்திகளையும் கட்டளைப்படி நடத்துங்கள்
Maintain the awareness of being the direct children of theWorld Authority and keep all your powers in order.

இன்று நாலாப்புறங்களிலும் அனைத்து குழந்தைகள் அன்பு என்ற அலைகளில் மூழ்கியிருக் கின்றனர்.
Today, all of you children everywhere are merged in waves of love.

அனைவரின் உள்ளத்திலும் விசே ̂மாக பிரம்மா பாபாவின் நினைவு இருக்கிறது.
The special memories of Father Brahma have emerged in everyone's heart.

அமிர்த வேளையிலிருந்து சாகார பாலனை அடைந்த இரத்தினங்கள் மற்றும் அலௌகீக பாலனை அடைந்த இரத்தினங்கள் இருவரின் உள்ளப்பூர்வமான நினைவுகளின் மாலைகள் பாப்தாதாவிடம் வந்தடைந்து விட்டது.
From amrit vela, the rosary of memories in the hearts of both types of jewels, those who have received sakar sustenance and those who have received avyakt sustenance were reaching BapDada.

அனைவரின் உள்ளத்திலும் பாப்தாதாவின் நினைவு என்ற கண்ணாடி தென்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் தந்தையின் உள்ளத்தில் அனைத்துக் குழந்தைகளின் அன்பு நினைறந்த நினைவு கலந்திருக்கிறது.
The pictures of your memories of BapDada are visible in everyone's heart and in the Father's heart is merged the love of all the children.

அனைவரின் உள்ளத்திலும் ஒரே ஒரு அன்பு நிறைந்த பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது - என்னுடைய பாபா மேலும் தந்தையின் உள்ளத்தில் இந்த பாடல் தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது - என்னுடைய இனிமையிலும் இனிமையான குழந்தை கள் தானாகவே ஒலிக்கப்படும் இந்த பாடல், எல்லையற்ற பாடல் எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது!
In everyone's heart, the one loving song playing is: "My Baba!", and the song playing in the Father's heart is: "My sweetest children!" This automatic song, this unlimited song, is so lovely.

பாப்தாதா நாலாப்புறங்களிலும் உள்ள குழந்தைகளின் அன்பு நிறைந்த நினைவிற்கு கைமாறாக உள்ளப்பூர்வமான அன்பு நிறைந்த ஆசிர்வாதங்கள்

பலகோடி மடங்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.
In return for your loving memories, BapDada is giving multimillion-fold love-filled blessings from the heart.

இப்பொழுதும் கூட உள்நாடு மற்றும் அயல்நாட்டு குழந்தைகள் அன்புக் கடலில் மூழ்கியிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார்.
BapDada is seeing that, even now, in this land and abroad, you children are merged in the Ocean of Love.

இந்த நினைவு நாள் விசேˆமாக குழந்தைகளை சக்திசாலி யாக ஆக்கக் கூடிய நாளாகும்.
This day of remembrance is the special day for making all the children powerful.

இன்றைய நாள் பிரம்மா பாபாவின் மூலம் கிரீடத்தை அணிந்து கொண்ட நாள்.
Today was the day when children were crowned by Father Brahma.

பிரம்மா பாபா குழந்தைகளை நிமித்தமாக, உலக சேவைக்கான பொறுப்பு கிரீடத்தை அணிவித்தார்.
Father Brahma put the crown of responsibility for world service on the instrument children.

தான் குப்தமாக ஆகி குழந்தைகளை சாகார ரூபத்தில் நிமித்தம் ஆக்கினார், நினைவு திலகமிட்டார்.
He himself became unknown and gave children the tilak of awareness to make them the instruments in the corporeal form.

சுயம் அவ்யக்த சொரூபம் ஆனார், பிரகாச கிரீடம் அணிந்து கொண்டார்.
He gave the children the crown of light like himself of the avyakt angelic form.

சுயம் செய்விப்பவராகி குழந்தைகளை செய்பவர்களாக ஆக்கினார். ஆகையால் இந்த நாளை நினைவு நாள் மற்றும் சக்திசாலியான நாள் என்று கூறப்படுகிறது.
He himself became karavanhar (one who makes others act) and made the children karanhar (the ones who do the work). This is why this day is called the day of remembrance, that is, the day of power.

நினைவு மட்டும் கிடையாது, நினைவின் கூடவே அனைத்து சக்திகளும் குழந்தைகளுக்கு வரதானமாக கிடைத்திருக் கிறது.
It is not just the day of awareness, for, together with this awareness, you children have all received all of these powers as a blessing.

அனைத்து குழந்தைகளின் அனைத்து நினைவு சொரூபங்களை பார்த்துக் பாப்தாதா கொண்டிருக்கின்றார்.
BapDada is seeing all the children as those who are embodiments of all awareness.

மாஸ்டர் சர்வசக்திவான் சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

சக்திவான்களாக அல்ல, சர்வ சக்திவான்.

He is seeing you in the forms of those who are master almighty authorities: not with just some powers, but with all powers.

இந்த சர்வசக்திகள் தந்தையின் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் வரதான ரூபத்தில் கிடைத்திருக்கிறது.

Each child has received all of these powers from the Father as a blessing.

தெய்வீக பிறப்பு எடுத்தவுடனேயே பாப்தாதா வரதானம் கொடுத்திருக்கின்றார் - சர்வசக்திவான் பவ! இது ஒவ்வொருவரின் பிறந்த நாள் வரதான மாகும்.

As soon as you took your divine birth, BapDada gave you the blessing: May you be full of all powers. This is the blessing for every birthday.

இந்த சக்திகளை வரதானத்தின் ரூபத்தில் காரியத்தில் பயன்படுத்துங்கள்.

Use the powers you have received as a blessing.

சக்திகள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைத்திருக்கிறது. ஆனால் காரியத்தில் பயன்படுத்துவதில் வரிசைக் கிரமம் ஏற்பட்டு விடுகிறது.

Each of you children has received them, but you become numberwise in using them.

ஒவ்வொரு சக்தி என்ற வரதானத்தையும் சரியான நேரத்தில் கட்டளையிட முடியும்.

You can order the blessing of every power according to the time.

வரதாதாவின் வரதானங்களின் நினைவு சொரூபமாகி சரியான நேரத்தில் கட்டளையிட்டீர்கள் எனில் ஒவ்வொரு சக்தியும் ஆஜராகியே தீரும்.

If you become an embodiment of the blessings you have received from the Bestower of Blessings, and order each power according to the time, that power will definitely then become present.

பிராப்தியான அடைந்த வரதானம், எஜமான் என்ற நினைவு சொரூபத்திலிருந்து நீங்கள் கட்டளையிடுங்கள், பிறகு சக்திகள் சரியான நேரத்தில் காரியத்தில் பயன்படவில்லை - இது நடக்கவே நடக்காது.

When you, the master who has attained the blessing, as an embodiment of awareness, order the powers, it is not possible that they are not used at that time.

ஆனால் எஜமான், மாஸ்டர் சர்வசக்திவான் என்ற நினைவு இருக்கையில் செட் ஆக வேண்டும். இருக்கையில் இல்லாமல் கட்டளையிட்டால் யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

However, the master should be seated on the seat of awareness of being a master almighty authority. No orders are obeyed if they are given without being seated on the seat.

குழந்தைகள் கூறுகின்றோம் - பாபா, நாம் உங்களை நினைவு செய்யும் போது நீங்கள் ஆஜராகி விடுகிறீர்கள், எதிரில் வந்து விடுகிறீர்கள்.

When children say, “Baba, I remember You, You become present”. The Lord becomes present.

பாபாவே ஆஜராகி விடும் போது சக்திகள் ஏன் ஆஜராகாது! விதிப்பூர்வமாக, எஜமான் என்ற அதிகாரத்துடன் கட்டளையிடுங்கள்.
When the Lord can become present, why would the powers not become present? Simply order them in the right way with the authority of a master.

இந்த சர்வசக்திகள் சங்கமயுகத்தின் பரமாத்மாவின் விசேˆ சொத்தாகும்.
All of these powers are your special Godly properties at the confluence age.

சொத்து யாருக்காக இருக்கும்?
Who is the property for?

குழந்தைகளுக்காகத் தான் சொத்து இருக்கும்.
The property is always for the children.

எனவே அதிகாரத்துடன், நினைவு சொரூபம் என்ற இருக்கையிலிருந்து கட்டளையிடுங்கள். ஏன் கடின உழைப்பு செய்கிறீர்கள், கட்டளையிடுங்கள்.
So, order them by right whilst seated on the seat of an embodiment of awareness. Why should you labour? Order them!

உலகிற்கு அதிகாரியின் நேரடிக் குழந்தை - இந்த நினைவின் போதை சதா வெளிப்படையாக இருக்க வேண்டும்.
You are the direct children of the World Authority. Let the intoxication of this awareness remain constantly emerged.

தன்னைத் தான் சோதியுங்கள் - உலகின் சர்வசக்திவானின் அதிகாரி ஆத்மா என்ற நினைவு தானாகவே இருக்கிறதா?
Let each of you check yourself: Do I constantly have the natural awareness of being a soul who has a right to the World Almighty Authority?

இருக்கிறதா? அல்லது அவ்வபோது இருக்கிறதா?
Do you have this awareness all the time or only sometimes?

இன்றைய நாட்களில் அதிகாரம் அடைவதில் தான் சண்டையே நடக்கிறது. ஆனால் உங்கள் அனைவருக்கும் பரமாத்ம அதிகாரம், பரமாத்ம சக்திகள் பிறந்தவுடனேயே பிராப்தியாக கிடைக்கிறது.
Nowadays, all of their fighting is because of wanting all rights, whereas all of you received at birth your Godly rights and Godly authority.

எனவே தனது அதிகார சக்தியில் இருங்கள்.
So, maintain the power of your rights.

தானும் சக்திசாலியாக இருக்க வேண்டும் மற்றும் அனைத்து ஆத்மாக் களுக்கும் சக்தி கொடுங்கள்.

Remain powerful yourself and also enable all souls to receive power.

அனைத்து ஆத்மாக்களும் இந்த நேரத்தில் அனைத்து ஆத்மாக்களும் சக்திகளை யாசிப்பவர்களாக இருக்கிறார்கள். உங்களது சிலைக்கு முன் சென்று யாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

At this time, all souls are begging for power (samarth), that is, powers (shaktiya). They constantly continue to beg for things in front of your non-living images.

எனவே தந்தை கூறுகின்றார் -ஹே சக்திசாலி ஆத்மாக்களே! அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்தி கொடுங்கள்.

So, the Father says: O powerful souls, give all souls power. Give them power (samarthi).

இதற்கு ஒவ்வொரு குழந்தையும் ஒரு விசயத்தில் அவசியம் கவனம் கொடுப்பது அவசியமாகும் - பாப்தாதா சிக்னல் கொடுத்திருக்கின்றார், பாப்தாதா ரிசல்ட் பார்க்கும் பொழுது மெஜாரிட்டி குழந்தைகளின் சங்கல்பம் மற்றும் நேரம் வீணாகிறது.

For this, it is essential for every child to pay attention to just one thing. BapDada had given you a signal for this and He has also seen in the result that the majority of children’s thoughts and time are being wasted.

மின்சாரத் தின் தொடர்பு சிறிது தளர்ந்தால் அல்லது கசிவு ஏற்பட்டால் விளக்கு சரியாக எரியாது.

For instance, if an electrical connection is even slightly loose or if there is a leakage, you cannot get proper light (electrical power).

அதே போன்று இந்த வீணானவைகள் என்ற கசிவு சக்திசாலி ஸ்திதியை சதா கால நினைவாக உருவாக்க விடாது. ஆகையால் வீணானவைகளை சிறந்தவைகளாக மாற்றுங்கள்.

Similarly, this leakage of waste doesn’t allow you to create a powerful stage and constant awareness. Therefore, change the waste into best.

பட்ஜெட் கணக்கு உருவாக்குங்கள்.

Make a savings scheme.

முழு நாளும் எவ்வளவு வீண் ஆனது, சிறந்தவையாக எவ்வளவு ஆனது என்று சதவிகிதம் பாருங்கள்.

Check what percentage was used in the best way and how much was wasted throughout the whole day.

40 சதவிகிதம் வீண் ஆனது என்று வைத்துக் கொள்ளுங்கள் அல்லது 20 சதவிகிதம் வீண் என்றால் அதை சேமியுங்கள்.

If there was 40 per cent waste or 20% waste, then save that.

சிறிது தானே வீண் ஆகிறது, பாக்கி முழு நாளும் நன்றாக இருக்கிறது என்று நினைக்காதீர்கள்.
Don’t think that only a little was wasted and that the rest of the day was fine.

ஆனால் வீணாக்கும் இந்த பழக்கம் நீண்ட காலமாக இருக்கின்ற காரணத்தினால் கடைசி நேரத்தில் ஏமாற்றி விடும்.
Because this habit of waste, is being performed over a long period of time, it will deceive you in the last moments.

வரிசைக்கிரமமாக ஆக்கி விடும், நம்பர் ஒன் ஆக்க விடாது.
It will make you numberwise, it will not allow you to become number one.

ஆரம்பத்தில் பிரம்மா பாபா சுய பரிசோதனையின் காரணத்தினால் தினமும் இரவில் சபை கூட்டினார்.
In the beginning, in order to check himself every night, Father Brahma used to hold a court every night.

எந்த சபை?
A court of what?

குழந்தைகளுடையது அல்ல, தனது கர்மேந்திரி யங்களின் சபை கூட்டினார்.
Not of the children, but he would hold court of his own physical organs.

முக்கிய மந்திரியாகிய மனமே, உனது இந்த நடத்தை நன்றாக இல்லை, கட்டளைப்படி நட என்று கட்டளையிடுங்கள்.
He would order them: O mind, chief minister, this activity of yours is not good. You now have to work under orders.

ஹே சம்ஸ்காரமே! கட்டளைப்படி நட, காரணத்தை கேட்டு நிவாரனம் செய்யுங்கள்.
O sanskars, you have to work under orders. Why was there that fluctuation? What was the reason for that? Find a solution!

ஒவ்வொரு நாளும் அலுவலக சபை கூட்டினார்.
Every day, he held an official court.

இவ்வாறு தினமும் தனது சுய இராஜ்ய சபை கூட்டுங்கள்.
Hold your court in the same way - the court of self-sovereignty.

சில குழந்தைகள் பாப்தாதாவிடம் இனிமையிலும் இனிமையான உரையாடல் செய்கின்றனர்.
Some children have sweet heart-to-heart conversations with BapDada.

தனிப்பட்ட உரையாடல் செய்கின்றனர். கூறட்டுமா?
They have personal chit-chats. Should Baba tell you?

எனக்கு எனது எதிர்கால சித்திரத்தை காண்பியுங்கள், நான் என்ன ஆவேன்? என்று கேட்கின்றனர்.
Many have personal chit-chats. They say: “Show me a picture of my future as to what I will become.

ஆதி இரத்தினங்களுக்கு நினைவிருக்கும், ஆரம்பத்தில் ஜெகதம்பாவிடம் அனைத்து குழந்தைகளும் தனது சித்திரம் கேட்டனர், மம்மா! நான் என்ன ஆவேன் என்ற எங்களது சித்திரம் கொடுங்கள்.
” You original jewels would probably remember how you used to ask Mother Jagadamba about your own picture: “Mama, show us a picture of what we will be like.

பாப்தாதாவிடமும் உரையாடல் செய்யும் போது தங்களது சித்திரம் கேட்கின்றனர்.
” So, whilst having a chit-chat with BapDada some children still ask for their own picture.

உங்கள் அனைவருக்கும் கூட மனம் இருக்கும் - எனது சித்திரம் கிடைத்து விட்டால் நன்றாக இருக்கும்.
All of you must also have this desire: that it would be good if you were to receive your own picture.

ஆனால் பாப்தாதா கூறுகின்றார் - பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு விசித்திர மான கண்ணாடி கொடுத்திருக்கின்றார். என்ன கண்ணாடி?
However, BapDada says: BapDada has given every child a unique mirror. What is that mirror?

நிகழ்காலத்தில் நீங்கள் சுய இராஜ்ய அதிகாரிகள் அல்லவா! இருக்கிறீர்களா?
At present, you are masters of yourselves, are you not?

சுய இராஜ்ய அதிகாரிகள் தானே?
Are you? Are you self-sovereigns?

ஆம் எனில் கை உயர்த்துங்கள். சுய இராஜ்யம், அதிகாரிகளாக இருக்கிறீர்களா?
If you are, then raise your hands! Are you self-sovereigns?

நல்லது.
Achcha.

சிலர் கை உயர்த்தாமல் இருக்கிறீர்கள்.
Some of you are not raising your hands.

சிறிது இருக்கிறீர்களா என்ன?
Are you masters to only a small extent?

நல்லது.
Achcha.

அனைவரும் சுய இராஜ்ய அதிகாரிகள், வாழ்த்துக்கள். ஆக சுய இராஜ்ய அதிகாரத்தின் சார்ட் உங்கள் எதிர்கால பதவியின் முகத்தை காண்பிக்கும் கண்ணாடி ஆகும்.
You are self-sovereigns, so congratulations! So, the chart of a master of oneself is the mirror that shows the face of your future status.

இந்த கண்ணாடி அனைவருக்கும் கிடைத்திருக்கிறது தானே?
Do you have this mirror? All of you have received it, have you not?

தெளிவாக இருக்கிறதா?
It is clear, is it not?

எந்த கருப்பு கறைகள் படிய வில்லை தானே! நல்லது.
There aren't any dark marks on it, are there?

கருப்பு கறைகள் இருக்காது, ஆனால் சில நேரங்களில் சூடான நீரின் மூடுபனி போன்று கண்ணாடியில் பதிந்து விடுகிறது. பனி கண்ணாடியில் படியும் போது கண்ணாடி தெளிவாக தென்படுவது கிடையாது.
There may not be any dark marks, but sometimes, when there is hot water, the mirror steams up and becomes misty. For example, when it is foggy, the mirror becomes such that you cannot see clearly in the mirror.

குளிக்கும் போது அனைவருக்கும் அனுபவம் இருக்கும்.
Everyone must have experienced this at the time of bathing.

அதே போன்று ஏதாவது ஒரு கர்மேந்திரி யமும் கூட இன்று வரை உங்களது கட்டுப்பாட்டில் இல்லையெனில், கட்டுப்பாட்டில் இருக்கிறது, ஆனால் அவ்வப்பொழுது இருப்பது கிடையாது. கண்களாக இருக்கட்டும், வாயாக இருக்கட்டும், காதாக இருக்கட்டும், காலாக இருக்கட்டும், காலும் அவ்வபொழுது கெட்ட சகவாசத்தின் பக்கம் சென்று விடுகிறது.
So, if even now one of your physical organs is not totally under your control – they are under your control, but sometimes they aren't – for instance, any physical organ, your eyes, mouth, ears or even your feet that sometimes go into wrong company, in which case, even your feet are not under your control.

ஆக காலும் கட்டுப்பாட்டில் இல்லை என்று ஆகிவிடுகிறது அல்லவா! குழுவில் அமர்ந்து விடுவார்கள், இராமாயணம் மற்றும் பாகவதத்தின் தலைகீழான

கதை கேட்பார்கள், சரியானதை கேட்கமாட்டார்கள்.
You would go and sit in a gathering. You would sit down and listen to the wrong stories of the Ramayana or the Bhagawad, not the right ones.

ஆக எந்த ஒரு கர்மேந்திரியமும் சங்கல்பம், நேரம் சகிதமாக கட்டுப்பாட்டில் இல்லையெனில், சுய இராஜ்யத்தில் கட்டுப்படுத்தும் சக்தியில்லையெனில் உலக இராஜ்யத்தை எப்படி கட்டுப்படுத்துவீர்கள்? இராஜாவாக எப்படி ஆவீர்கள்?
So, if any of your physical senses are not under your control, and that also includes thoughts and time, you can check from this that, since you don't have any controlling power over your own sovereignty, how would you control the kingdom of the world? So, how would you become a king?

அங்கு அனைத்தும் மிகச் சரியாக இருக்கும்.
There, everything is accurate.

கட்டுப்படுத்தும் சக்தி, ஆளும் சக்தி அனைத்தும் தானாகவே சங்கமயுகத்தின் முயற்சியின் பலனாக கிடைக்கும்.
You automatically have controlling power and ruling power as your reward for the efforts you made at the confluence age.

எனவே சங்கமயுகம் அதாவது நிகழ்காலத்தில் கட்டுப்படுத்தும் சக்தி, ஆளும் சக்தி குறைவாக இருந்தால், முயற்சி குறைவு எனும் போது எப்படிப்பட்ட பிராப்தி கிடைக்கும்?
So, if you lack controlling power and ruling power at this time, the confluence age, it means that if effort is lacking, so what would the reward be?

கணக்கு பார்ப்பதில் புத்திசாலிகள் அல்லவா! ஆக இந்த கண்ணாடியில் தனது முகம் பாருங்கள், தனது தோற்றம் பாருங்கள்.
You are clever in calculating this, are you not? Therefore, look at your face in this mirror. Look at your own face.

இராஜாவாக தென்படுகிறதா? இராயல் குடும்பத்தினராக தென்படுகிறதா? இராயல் பிரஜையாக தென்படுகிறதா? சாதாரண பிரஜையாக தென்படுகிறதா? எப்படிப்பட்ட தோற்றம் தென்படுகிறது?
Which face comes in front of you? That of a king, that of someone who is part of a royal family, a royal subject, or an ordinary subject?

சித்திரம் கிடைத்து விட்டதா?
So, did you see your picture?

இந்த சித்திரத்தின் மூலம் சோதனை செய்யுங்கள்.
Check with this image.

ஒவ்வொரு நாளும் சோதனை செய்ய வேண்டும். ஏனெனில் நீண்ட கால

முயற்சியின் மூலம் நீண்ட கால இராஜ்ய பாக்கியம் பலனாக கிடைக்கும்.
Check every day, because attainment for a long time is based on your efforts for a long time.

கடைசி நேரத்தில் எல்லையற்ற வைராக்கியம் வந்து விடும் என்று நீங்கள் நினைத்தீர்கள் எனில் கடைசி நேரம் வரும் பொழுது நீண்ட காலமாக இருக்குமா? அல்லது குறுகிய காலமாக இருக்குமா?
If you think that you will automatically have unlimited disinterest at the end, then, in the final moments, would that disinterest be the final moments, or would it have been for a long period of time?

நீண்ட காலம் என்று கூற முடியாது அல்லவா! எனவே 21 பிறவிகள் முழுமையாகவே இராஜ்ய அதிகாரி ஆக வேண்டும், சிம்மாசனத்தில் அமரா விட்டாலும் சரி, ஆனால் இராஜ்ய அதிகாரியாக இருக்க வேண்டும்.
You would not say that that was a long period, would you? So, did you become a complete master of yourself for 21 births? You may not sit on a throne, but you should have a right to a kingdom.

இந்த நீண்ட காலம் (முயற்சி) நீண்ட கால பிராப்திக்கு தொடர்பு இருக்கிறது. ஆகையால் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். இப்பொழுது விநாசத்திற்கான தேதி முடிவாக வில்லை, தெரியவில்லை.
This long period of time has a connection with the reward for a long period of time. Therefore, do not become careless. As yet, the date for destruction has not been fixed.

8 ஆண்டுகளில் ஏற்படுமா, 10 ஆண்டுகளில் ஏற்படுமா? தெரியவே யில்லை.
You don’t know whether it will be another eight years or ten years. You don’t know that.

வரக் கூடிய கால கட்டங்களில் ஆகிவிடுவேன், கிடையாது.
So, don’t think that it will happen in the time that is still to come.

உலகத்தின் இறுதி பற்றி யோசிப்பதற்கு முன் தனது பிறவியின் இறுதி காலம் பற்றி யோசியுங்கள். உங்களிடம் தேதி முடிவாகி இருக்கிறதா? இந்த தேதியின் எனக்கு மரணம் ஏற்படும் என்று யாருக்காவது தேதி முடிவாகியிருக்கிறதா?
No, before thinking of the end of the world, first of all, think about the final period of your own life.

யாரிடமாவது இருக்கிறதா?
Do you have a date fixed?

இல்லை அல்லவா! உலக இறுதி ஏற்பட்டே தீரும், சரியான நேரத்தில் நடந்தே தீரும். ஆனால் முதலில் தனது இறுதி காலம் பற்றி யோசியுங்கள் மற்றும் ஜெகதம்பா சுலோகன் நினைவு செய்யுங்கள் - என்ன சுலோகன்?
Do any of you know that you are going to die on this date? Does anyone know this? You don’t, do you? The world is to end, and that will happen at its own time, but, first of all, think about your own final period and remember the slogan of Jagadamba. What was her slogan?

ஒவ்வொரு நிமிடமும் தனது இறுதி நிமிடம் என்று நினையுங்கள்.
“Consider every moment to be your final moment.

திடீரென்று நடைபெறும்.
” It has to happen suddenly.

உலகம், உங்களது இறுதி நேரத்திற்கான தேதி கூறப்படமாட்டாது.
You won’t be given a date, neither for the world nor for your final moments.

அனைத்தும் திடீரென்று நடைபெறும் விளையாட் டாகும். ஆகையால் சபை கூட்டுங்கள், ஹே இராஜாக்களே! சுய இராஜ்ய அதிகாரி இராஜாக்களே! தனது சபை கூட்டுங்கள்.
All of this is a game about everything happening suddenly. Therefore, hold your court. O king! O self-sovereign king! Hold your own court.

கட்டளைப்படி நடத்துங்கள். ஏனெனில் சட்டம் ஒழுங்கு இருக்கும் என்று எதிர்காலத்திற்கான புகழ் பாடப் பட்டிருக்கிறது.
Keep it in order, because the praise of the future is that there will be law and order.

இயற்கையாகவே இருக்கும்.
It will be natural there.

அன்பு மற்றும் சட்டம் இரண்டும் சமநிலையில் இருக்கும். இயற்கையாகவே இருக்கும்.
There will be a balance of both love and law; it will be natural.

இது சட்டம் என்று இராஜா எந்த ஒரு சட்டத்தையும் உருவாக்கமாட்டார்.
It is the law that, if someone is not a king, he cannot pass a law.

இன்றைய நாட்களில் சட்டம் உருவாக்கிக் கொண்டிருக் கின்றனர்.
Nowadays, people continue to make laws.

இன்றைய நாட்களில் காவல் துறையினரும் சட்டத்தை மீறி விடுகின்றனர்.
Nowadays, even policemen take the law into their own hands.

ஆனால் அங்கு இயற்கையாகவே அன்பு மற்றும் சட்டம் சமநிலையில் இருக்கும்.
However, there, there will be a natural balance of love and law.

ஆக இப்பொழுது சர்வசக்திவான் என்ற இருக்கையில் செட் ஆகியிருங்கள்.
So, now remain set on the seat of an almighty authority.

பிறகு இந்த கர்மேந்திரியங்கள், சக்திகள், குணங்கள் அனைத்தும் உங்கள் சரி ஐயா, சரி ஐயா என்று கூறும், ஏமாற்றாது.
Then, all of those physical organs, powers and virtues will say, “Yes, my lord! Yes, my lord!” to you. They will not deceive you. “Yes, I am present.

இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?
” So, what will you do now?

அடுத்த நினைவு நாளன்று எந்த விழா கொண்டாடுவீர்கள்?
What celebration will you celebrate next year on the Day of Remembrance?

ஒவ்வொரு மண்டலமும் இந்த விழா கொண்டாடுகிறீர்கள் அல்லவா! பாராட்டு விழாவும் அதிகம் கொண்டாடி விட்டீர்கள்.
All the zones have celebrations, do they not? You have also had many honouring ceremonies.

இப்பொழுது சதா ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் நேரத்தின் வெற்றி விழா கொண்டாடுங்கள்.
Now celebrate the ceremony of the success of every thought and every moment.

இந்த விழா கொண்டாடுங்கள்.
Celebrate this ceremony.

வீணானவைகள் அழிந்து விட வேண்டும். ஏனெனில் நீங்கள் வெற்றி மூர்த்தி ஆவதன் மூலம் ஆத்மாக்களுக்கு திருப்தி என்ற வெற்றி பலனாக கிடைக்கும்.
All waste should now end, because when you become images of success, souls will attain the success of being fully satisfied.

நிராசையிலிருந்து நாலாபுறங்களிலும் சுப ஆசை களின் தீபம் ஏற்றப்பட்டு விடும்.
From being hopeless, the lamps of pure hopes will ignite everywhere.

ஏதாவது வெற்றி கிடைத்தால் தீபம் ஏற்றுவார்கள் அல்லவா! இப்பொழுது உலகில் ஆசைகளின் தீபத்தை ஏற்றுங்கள்.
When there is any type of success, they ignite lamps, do they not? Now, ignite the lamps of hope in the world.

ஒவ்வொரு ஆத்மாவிற்குள் ஏதாவது ஒரு நிராசை இருக்கவே செய்கிறது, நிராசையின் காரணத்தினால் குழப்பம் இருக்கிறது, டென்சன் இருக்கிறது.
Every soul has one type of hopelessness or another. Because of hopelessness, they are distressed and in tension.

ஹே அழிவற்ற தீபங்களே! இப்பொழுது ஆசை தீபங்களின் தீபாவளி கொண்டாடுங்கள். முதலில் தன் மீது பிறகு அனைவரின் மீது.

Therefore, O imperishable lamps, now celebrate the Diwali of the lamps of hope! First yourselves, and then everyone.

கேட்டீர்களா!
Did you hear this?

மற்றபடி பாப்தாதா குழந்தைகளின் அன்பைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்.
BapDada is pleased to see the love of you children.

அன்பு என்ற பாடத்தில் சதவிகிதம் நன்றாக இருக்கிறது.
The percentage in the subject of love is good.

நீங்கள் இவ்வளவு முயற்சி செய்து இங்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? உங்களை அழைத்து வந்தது யார்?
Why have you arrived here having made so much effort?

புகைவண்டி அழைத்து வந்ததா, விமானம் அழைத்து வந்ததா அல்லது அன்பு அழைத்து வந்ததா?
What brought you here: Was it the train or the plane? It was love that brought you here.

அன்பு என்ற விமானத்தின் மூலம் வந்தடைந்து விட்டீர்கள்.
You arrived here on the plane of love.

ஆக அன்பு என்ற விசயத்தில் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள்.
So, you have passed in the subject of love.

இப்பொழுது சர்வசக்திகளில் மாஸ்டராக இருக்கிறேன் என்பதில் தேர்ச்சி பெற வேண்டும். பிறகு இந்த இயற்கை, இந்த மாயை, இந்த சன்ஸ்காரம் போன்ற அனைத்தும் உங்களது வேலைக்காரர்களாக ஆகிவிடும்.
You are now masters in being almighty authorities, and so you have passed in that subject.

ஒவ்வொரு நேரமும் எதிர்பார்க்கும் - எஜமானரே! என்ன கட்டளை கொடுக்கிறீர்கள்! பிரம்மா பாபாவும் எஜமானராகி உள்ளுக்குள்ளேயே இவ்வாறு சூட்சும முயற்சி செய்தார், அது உங்களுக்கும் தெரியும் - சம்பன்னம் ஆகிவிட்டார், பறவை பறந்து விட்டது.
So, these elements, Maya and the sanskars will all become your servants. They will wait for their master’s orders at every moment. Father Brahma too, as a master, made such internal subtle effort in such a way, that you weren’t even aware of how he became complete. The cage opened and the bird flew away.

கூண்டு திறக்கப்பட்டு விட்டது. சாகார உலகின் கணக்கு வழக்கு, சாகார உடலின் கூண்டு திறக்கப்பட்டு விட்டு, பறவை பறந்து விட்டது.

The cage of karmic accounts of the corporeal world and the physical body opened and the bird flew away.

இப்பொழுது பிரம்மா பாபாவும் மிக பாசத்துடன், அன்புடன் குழந்தைகளே! சீக்கிரம் வாருங்கள், சீக்கிரம் வாருங்கள், இப்பொழுதே வாருங்கள் என்று வரவேற்றுக் கொண்டிருக்கின்றார். இறக்கை கிடைத்து விட்டது தானே!
Father Brahma is now also invoking all of you children with a lot of love from the depths of his heart, saying: Come quickly! Come quickly! Come, now! Come, now! So you have received wings, have you not?

அனைவரும் ஒரு விநாடியில் தனது மனதில் இந்த டிரில் செய்யுங்கள், இப்பொழுதே செய்யுங்கள்.
Now, all of you have to perform this drill in your hearts in a second. Do it right now.

அனைத்து எண்ணங்களையும் நிறுத்தி விடுங்கள், இந்த டிரில் செய்யுங்கள். ஓ பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா, நான் உங்களுக்குச் சமமாக அவ்யக்த ரூபதாரி ஆகியே விட்டேன் (பாப்தாதா டிரில் செய்வித்தார்)
Finish all thoughts. Perform the drill: O Baba! Sweet Baba! Lovely Baba! We are now about to become those with avyakt forms, just like you, right now. (Baba conducted drill.)

நல்லது. நாலாப்புறங்களிலும் உள்ள அன்பான மற்றும் சக்திசாலியான குழந்தைகளுக்கு, நாலாப் புறங்களிலும் உள்ள சுய இராஜ்ய அதிகாரி மற்றும் உலக இராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, நாலாப்புறங்களிலும் உள்ள மாஸ்டர் சர்வசக்திவான் என்ற இருக்கையில் செட்டாகி இருக்கும் தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு, சதா எஜமானராகி இயற்கை, சன்ஸ்காரம், சக்திகள், குணங் களுக்கு கட்டளையிடக் கூடிய உலக இராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, தந்தைக்குச் சன்ம் சம்பூர்னதா, சம்பன்னதாவை நெருக்கத்தில் கொண்டு வரக் கூடிய உள்நாடு, வெளி நாட்டில் ஒவ்வொரு இடத்திலும் மூலை முடுக்கில் இருக்கக் கூடிய குழந்தைகளுக்கு சக்திசாலியான நாளுக்கான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.
Achcha.To all of you loving and powerful children everywhere, to all the self-sovereign children and so the children who have a right to the world, to all the intense effort-making children everywhere who remain seated on the seat of a master almighty authority, to the world-sovereign children who as their constant masters, order the elements, sanskars, powers and virtues, to those who bring completion and perfection close, like the father, to all of you children in every corner of this land and abroad, BapDada’s love, remembrance and namaste for the day of power.

இப்பொழுது பாப்தாதாவிற்கு யாருடைய நினைவு விசேˆமாக வந்து கொண்டிருக்கிறது?
Who is BapDada especially remembering right now?

ஜனக் குழந்தை.
Child Janak.

நான் சபையில் அவசியம் ஆஜராவேன் என்று செய்தி அனுப்பியிருக்கிறது.
She sent a special message that she would definitely be present in the gathering.

இலண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ரஷ்யா மற்றும் அனைத்து பாரதத்தின் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள குழந்தை களுக்கு ஒவ்வொருவரின் பெயர் மற்றும் விசேˆதா சகிதமாக அன்பு நினைவுகள்.
So, whether you are from London, America, Australia, Africa, Asia or the whole of Bharat, to all of you children, love and remembrance personally by name and speciality.

உங்களுக்கு எதிரில் அன்பு நினைவுகள் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நல்லது.
You are all receiving personal love and remembrance, are you not? Achcha.

இன்று மதுவனத்தில் உள்ளவர்களையும் நினைவு செய்தேன்.
Today, Baba also remembered those from Madhuban.

இவர்கள் முன்னால் முன்னால் வந்து அமர்கிறீர்கள் அல்லவா! மதுவனத்தில் உள்ளவர்கள் கை உயர்த்துங்கள்.
They are sitting at the front. All of you from Madhuban, raise your hands!

அனைவரும் மது வனத்தில் புஜங்கள் ஆவீர்கள். மதுவனத்தின் உள்ளவர்களுக்கு விசேˆமாக தியாகத்தின் பாக்கியம் சூட்சுமத்தில் கிடைக்கிறது. ஏனெனில் இருப்பது பாண்டவபவனில், மதுவனத்தில், சாந்திவனத்தில், ஆனால் சந்திப்பவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது, மதுவனத்தில் உள்ளவர்கள் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.
All the arms of Madhuban! All of you from Madhuban especially receive the fortune of your renunciation in a subtle way, because you live in Pandav Bhavan, Madhuban, Shantivan. However, those who are to meet Baba receive a chance, whereas those from Madhuban just watch as observers.

ஆனால் மனதில் சதா மதுபன்வாலா (பாபா) நினைவு இருக்கிறது. இப்பொழுது மதுவனத்தில் வீணானவைகளின் பெயர், அடையாளம் சமாப்தி ஆக வேண்டும்.
However, Baba always remembers those from Madhuban as those in His heart. The name and trace of waste in Madhuban should end.

சேவையில், ஸ்திதியில் அனைத்திலும் மகான்.
Be great in doing service and in your stage. Be great in everything.

சரி தானே! மதுவனத்தில் உள்ளவர்களை மறப்பதே கிடையாது. ஆனால் தியாகத்திற்கான வாய்ப்பு கொடுக்கின்றார். நல்லது.
Is this all right? Baba doesn't forget those from Madhuban, but those from Madhuban are given the chance to have renunciation.

வரதானம்:நெற்றியின் மூலம் திருப்தி என்ற பிரகாசத்தின் ஜொலிப்பு காண்பிக்கக் கூடிய சாட்சாத்கார மூர்த்தி பவ.
Blessing:May you give others a view of the sparkle of contentment on your forehead and become an image that grants visions.

யார் சதா திருப்தியாக இருக்கிறார்களோ, அவர்களது நெற்றியிலிருந்து திருப்தி என்ற ஒளி சதா ஜொலித்துக் கொண்டே இருக்கிறது. அவரை உதாசீனமான ஒரு ஆத்மா பார்த்து விட்டால் அவரும் குஷியடைந்து விடுவார், அவரது உதாசீனம் நீங்கி விடும்.
The sparkle of contentment constantly continues to sparkle on the foreheads of those who constantly stay content. If any unhappy soul sees them, that soul also becomes happy and their unhappiness finishes.

யாரிடம் திருப்திக்கான குஷி என்ற பொக்கி˜ம் இருக்கிறதோ, அவர் பின்னால் தானாகவே அனைவரும் ஈர்க்கப்படுவர்.
Everyone is automatically attracted to those who have the treasure of the happiness of contentment.

அவர்களது குஷியான முகம் சைத்தன்ய பலகை ஆகிவிடும், அநேக ஆத்மாக்களை உருவாக்கும் அறிமுகம் கொடுக்கும்.
Their faces of happiness become living boards that give the introduction of the One who made them.

ஆக இவ்வாறு திருப்தியாக இருக்கும் மற்றும் அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய திருப்திமணி ஆகுங்கள், இதன் மூலம் பலருக்கு சாட்சாத்காரம் ஏற்படும்.
So, become such jewels of contentment who stay content and make others content, so that many can have visions.

சுலோகன்:காயம் ஏற்படுத்துபவர்களின் வேலை காயம் ஏற்படுத்துவது, உங்களது வேலை தன்னை பாதுகாத்துக் கொள்வது.
Slogan:It is the duty of those who hurt others to hurt and it is your duty to protect yourselves.

அவ்யக்த இஷாரே: ஏகாந்த பிரியராக ஆகுங்கள், ஒற்றுமை மற்றும் ஏகாக்ரதாவை தாரணை செய்யுங்கள்
Have love for solitude and imbibe unity and concentration.

திறப்பு விழாவில் தேங்காய் உடைப்பது போன்று, ரிப்பன் கட் செய்து திறப்பு விழா செய்வது போன்று ஒரே வழி, ஒரே பலம், ஒரே நம்பிக்கை மற்றும் ஒற்றுமை என்ற ரிப்பன் கட் செய்யுங்கள். பிறகு அனைவரின் திருப்தி, மகிழ்ச்சி என்ற தேங்காய் உடையுங்கள்.
Just like breaking a coconut at the opening ceremony, cut the ribbon and cut the ribbon of One Way, One Strength, One Hope and Unity. Then break the coconut for everyone's satisfaction and happiness.

இந்த நீரை பூமியில் தெளியுங்கள், பிறகு பாருங்கள் வெற்றி எவ்வளவு

கிடைக்கிறது.

Sprinkle this water on the earth, then see how much success you get.